# <u>In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.</u>

O.S.No. 113/2023 தேதி- 25.02.2026
(P.W.1) –ஜெனிதா

<u>குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி-</u>

1. வழக்கு பட்டிகை சொத்தை 1வது பிரதிவாதி தனக்கு உரிமைப்பட்ட சொத்தாக கோருகிறார் என்றால் சரிதான். ரீ சர்வே எண்.611/4, 612/1A2, 612/1A1B ல் உட்பட்ட 9 சென்ட் நிலம் சந்திரகுமாருக்கு சொந்தமானது என்றால் தெரியாது. மேற்சொன்ன சந்திரகுமார் தற்போது இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவருக்கு விஜி என்ற மனைவியும், டெபி, டெபின் டேனியல், டெபின் ஜோஸ்வா என்ற பிள்ளைகள் உள்ளார்கள் என்றால் சரிதான்.

2. சந்திரகுமாருக்கு உரிமைப்பட்ட சொத்துக்கள் மேற்சொன்ன நான்கு நபர்களுக்கு உரிமைப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். மேற்சொன்ன விஜி தான் இவ்வழக்கின் 1வது பிரதிவாதி என்றால் சரிதான். மேற்சொன்ன சந்திரகுமாரின் மூன்று பிள்ளைகளை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் சொல்லப்பட்டுள்ள வழக்கு பட்டிகை சொத்து எனக்கு உரிமைப்பட்ட சொத்து இல்லை என்றாலும், அதனுடைய கைவசம் என்னிடம் இல்லை என்றால் சரியல்ல.

3. இந்த வழக்கு பட்டிகை யாருக்கு உரிமைப்பட்டது என பிரச்சனை எழுந்துள்ளதால் வழக்கு பட்டிகை சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் கோராமல் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. சந்திரகுமாருடைய மூன்று பிள்ளைகளும் இவ்வழக்கின் அவசியமான தரப்பினர்கள் என்றாலும், அவர்களை இவ்வழக்கில் தரப்பினர்களால் சேர்க்காததால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எந்த நிவாரணமும் கிடைக்கத்தக்கதல்ல என்றாலும், வழக்கு பிரதிவாதிகளுக்கு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல.